SRI JINAYA NAMAHA

# 1008 SHRI VIRSHABANATHA BHAGWAN JAIN TEMPLE TRUST

OTHALAVADI, TIRUVANNAMALAI DISTRICT,
TAMILNADU -632326. Reg No. 14/2026
**Account Name:** 1008 SHRI VIRSHABANATH BHAGWAN JAIN TEMPLE TRUST
**Account No:** 8350857706
**Bank Name:** Indian Bank **Branch:** Devikapuram **IFSC:** IDIB000D074

தேதி:

பெறுநர்,

மதிப்பிற்குறிய ஐயா,

இந்திய திருநாட்டின், தமிழ்நாட்டில் திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் வட்டம் ஓதலவாடி கிராமத்தில் சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையான ஜெயின் ஜினாலயம் உள்ளது. 10-ம் நூற்றாண்டை சேர்ந்த சோழ இளவரசி குந்தவை பிராட்டி திருமலை ஜினாலயத்தை நிறுவிய போது அருகில் உள்ள ஓதலவாடியில் ஆலயத்தை அமைத்ததாக முன்னோர்கள் வழி வரலாறு உள்ளது. அதன்பிறகு வந்த சோழ மன்னன் ஓதலன், மல்லிநாத சம்புவராய மன்னர்கள் இக்கோயிலுக்கு பள்ளிசந்தம் மற்றும் பிறதானங்கள் அளித்ததை கோயில் தெற்குப்புற சுவற்றில் உள்ள கல்வெட்டின் மூலம் அறியலாம்.

ஜினாலயத்தின் மூலவராக 24 தீர்த்தங்கரர்களில் முதல் தீர்த்தங்கரரான 1008 ஸ்ரீ விருஷபநாத பகவான் உள்ளார். மூலவர் சிலை மிகுந்த கலைநயத்துடன் சிலையில் பின்புறம் கற்பக விருட்ச மரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இவர் ஸ்ரீ அணியா அழகர் என்று அழைக்கப்படுகிறார்.

கிராமத்தில் முன்பு 80 குடும்பங்கள் வரை வசித்து உள்ளனர். தற்போது 40 குடும்பங்கள் ஊரில் உள்ளோம். எங்களின் பிரதான தொழில் விவசாயம். நாங்கள் அட்சயதிருதியை, காணும் பொங்களன்று பகவான் உற்சவர் வீதி உலா விழா நடத்துகின்றோம், தமிழ் மார்கழி மாதம் முக்குடை பூஜை நடைபெறுகிறது. உள்ளூர் சக்ரேஸ்வரி அம்மன் மகளிர் அமைப்பினர் மாதந்தோறும் பௌர்ணமியன்று பக்தாமர தீபம் ஏற்றுகின்றனர். பிரதிமாதம் 2-வது ஞாயிற்றுக்கிழமை பூஜை செய்கின்றனர், மகளிர் அமைப்பு மற்றும் ஓதலவாடி சமண எழுச்சி இளைஞர் மன்றம் இணைந்து மாதந்தோறும் ஆலயத்தை பராமரிக்க பணியில் ஈடுபடுகின்றனர், தினந்தோறும் காலை, மாலை கோயில் திறக்கப்பட்டு நித்ய பூஜை நடைபெறுகிறது.

பழமையான இவ்வாலயத்தை புணரமைப்பு செய்ய கிராம மக்கள் இணைந்து 108 நபர்களை கொண்ட 1008 ஸ்ரீ விருஷபநாத பகவான் ஜெயின் ஜினாலய அறக்கட்டளையை 17/06/2026 அன்று பதிவு செய்துள்ளோம், ஆலய விரிவாக்கத்திற்கு நான்கு குடும்பங்கள் இணைந்து 20 சென்ட் நிலம் தானம் அளித்துள்ளனர்.

ஆலய கோபுரம், மேல்தளம் சீரமைத்தல், 24 தீர்த்தங்கரர் சிலை, சுற்று சுவர், நடைபாதை, ஆழ்த்துளை கிணறு, யதி நிவாஷ் மற்றும் அரங்கம் ஆகியன புதியதாக அமைக்க உள்ளோம். 26/08/2026 அன்று திருமலை அரஹந்தகிரி ஸ்வஸ்தி ஸ்ரீ தவளகீர்த்தி சுவாமிகள் பூமிபூஜை செய்து அவர்களின் வழிகாட்டுதலின்படி திருப்பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளுக்கு நன்கொடை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

தலைவர்:

து.தலைவர்:

செயலாளர்:

து.செயலாளர்:

பொருளாளர்:

இணை செயலாளர்:

செயற்குழு உறுப்பினர்கள்

1.
2.
3.
4.
5.
6.
7.

Bhattaraka Chinthamani
SWASTHI SHREE DHAVALAKEERTHI SWAMIJI